# IYACHAMY ACADEMY

Institution For Competitive Exam

Ready For Group 2,2A Mains 2021 ?

## GROUP 2 MAINS TEST SERIES -2021

ONLINE & OFFLINE TEST

FEE OFFLINE - RS.18000 / POSTAL - RS 15000

Starts From July Second Week



**DURATION: TILL MAINS EXAM**
காலம்: முதன்மைத் தேர்வு வரை

**TOTAL TEST: 15 UNIT WISE + 10 FULL TEST**
மொத்த தேர்வுகள் : 15 அலகு தேர்வுகள் + 10 முழுத்தேர்வுகள்

**SPECIAL EMPHASIS ON THIRUKURAL ESSAY**
திருக்குறள் கட்டுரைக்கு சிறப்பு கவனம் அளிக்கப்படும்

**EXPLANATION VIDEO FOR THIRUKURAL AND TRANSLATION PART**
திருக்குறள் மற்றும் மொழிப்பெயர்ப்பு பகுதிக்கு விளக்க வீடியோ

**HARD COPY MATERIALS FOR UNIT WISE IN TAMIL & ENGLISH MEDIUM**
அலகு அடிப்படையில் அச்சடிக்கப்பட்ட பாடக் குறிப்புகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்

**INDIVIDUAL FEEDBACK**
தனியான மதிப்பீடு

**ANSWER BOOKLET WILL BE PROVIDED**
விடைப் புத்தகங்கள் வழங்கப்படும்

**FOR POSTAL STUDENTS MATERIALS & ANSWER BOOKLETS WILL BE SENT VIA COURIER**
அஞ்சல் வழித் தேர்வர்களுக்கு பாடக்குறிப்புகள் &விடைத்தாள்கள் கூரியர் மூலம் அனுப்பபடும்

**FOR DETAILS CONTACT**
9952521550

**ADDRESS**
NO.172,THIRUGNANASAMBANDAR ST,
ANNACHI KADAI,TIRUVALLEESWARAR NAGAR,
ANNA NAGAR WEST, CHENNAI - 600040

BATCH 2 – ONLY ONLINE MODE

- **Duration: Till Mains Exam**
  **காலம்: முதன்மைத் தேர்வு வரை**
- **Total Test: 15unit Wise + 10 full test**
  **மொத்த தேர்வுகள் : 15 அலகு தேர்வுகள் + 10 முழுத்தேர்வுகள்**
- **Special Emphasis on Thirukural Essay**
  **திருக்குறள் கட்டுரைக்கு சிறப்பு கவனம் அளிக்கப்படும்**
- **Explanation Video for Thirukural and Translation Part**
  **திருக்குறள் மற்றும் மொழிப்பெயர்ப்பு பகுதிக்கு விளக்க வீடியோ**
- **Hard Copy materials for unit wise in Tamil & English Medium**
  **அலகு அடிப்படையில் அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்**
- **Individual Feedback**
  **தனியான மதிப்பீடு**
- **Answer Booklet will be provided**
  **விடைப் புத்தகங்கள் வழங்கப்படும்**
- **For postal students Materials and answer booklets will be sent via courier**
  **அஞ்சல் வழித் தேர்வர்களுக்கு பாடக்குறிப்புகள் மற்றும் விடைத்தாள்கள் கூரியர் மூலம் அனுப்படும்**

# GROUP II MAINS
# THIRUKURAL KEYS

**1. வாழ்வாங்கு வாழ வள்ளுவம் வலியுறுத்தும் கருத்துக்களை விளக்குக**

**Explain the concepts that Valluvam emphasize to live better life**

உலகப் பொதுமறை திருக்குறள் உலகமக்களுக்குப் பொதுவான இறைவழிபாடு, அறவாழ்வு, ஒழுக்கம், தூய்மை, கல்வி, குடும்பம், சமுதாயம், நாடு, நட்பு, அரசியல், மக்கள் கடமை, வாழ்வியல் நெறி, பெண்ணியம், கற்பு, மானம், பெருமை எல்லாவற்றிற்கும் இலக்கணம் கற்பித்தது போல் அமைந்து வாழ்க்கைக்கு உதவும் உயரிய தத்துவங்களை தன்னகத்தே கொண்டு மனித வாழ்விற்கு உயிராய் உள்ளது.

ஒரு சமூகத்தின், நாட்டின், உலகத்தின் கௌரவம், தனி மனிதனின் கல்வி, ஒழுக்கம், பணி, நிதி, வளர்ச்சி, ஆரோக்கியம் ஆகியவற்றின் மூலம் மட்டுமே அமைய முடியும். இதற்கு மனிதனுக்கு ஒரு அறவழிப் பாதை தேவைப்படுகிறது.. இவ்வறவழிப்பாதையின் மூலம் மட்டுமே மேற்சொன்ன தனிமனிதனுக்கான அறவழிப் பண்புகள் கிட்டும்.

**இல்வாழ்க்கை**

**1330** குறள்களில் ஏதேனும் நான்கு குறள்களைப் படித்து அதன் தத்துவங்களின் வழிநின்று வாழ்ந்தோமானால் மனிதகுல சமுதாயமே தேவர்களுக்கு ஒப்பாகும்.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது**

இல்லறவாழ்க்கைக்கு மட்டுமின்றி இன்று உலகத்திற்கே முதலில் அத்தியாவசியமாய் ஒவ்வொரு மனிதரிடத்துள்ளும் இருக்க வேண்டிய உயரிய பண்புகள் அன்பும், அறமும் என்கிறார். இது ஒன்றே போதும் சாதி, மதம், ஏழ்மை, பணக்காரன், குற்றம், **கொலை, கொள்ளை,** ஏமாற்று வாழ்க்கை போன்ற கொடிய அரக்கன்களை ஒழித்துவிடலாம். உலகம் என்ற சக்கரத்திற்கு உண்மை என்ற அச்சாணி இருந்தால் வாழ்க்கைப் பயணம் முழுவதும் இன்பமே.

**கல்விக்காக**

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக**

இந்தக் குறளில் உள்ள தத்துவமானது கற்கத் தகுந்த நல்ல நூல்களைக் குற்றம் அறத் தெளிவாகக் கற்க வேண்டும். கற்றபிறகு அதன்படி வாழ வேண்டும் என்பதாகும். இங்கே **கல்விக்கும் வாழ்க்கைக்கும் எது இலக்கணம்** என்று அழகாக வள்ளுவர் கூறுகிறார்.

**ஒழுக்கத்திற்காக**

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்**

ஒருவருக்கு ஒழுக்கம் (சத்தியம், உண்மை , நன்னெறி, நேர்மை, தூய்மை, நல்லெண்ணம்) உயிரைவிடச் சிறந்தது. பின் வேறொன்றுமில்லை என்ற தத்துவம் உலகத்தில் உள்ள எல்லா மனிதருக்கும் பொருந்தும்.

**புகழ்**

**தோன்றின் புகழொடு தோன்றுக, அஃது இலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

ஒரு துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டால் அத்துறையில் புகழ் பெற்றுத் திகழ வேண்டும். அப்படி இல்லாவிடில் அத்துறையை மேற்கொள்ளாமல் இருப்பது நல்லது. இக்குறளில் உள்ள

தத்துவம் உலகத்தில் உள்ள அனைத்து நாட்டு மக்களுக்கும், வாழ்க்கையில் ஏதாவது ஒன்றைச் சாதிக்கத் துடிக்கும் மனிதர்களுக்கும் உற்சாக பாணமாகும் .

இந்த நான்கு குறள்களில் அடங்கியுள்ள உண்மையை, தத்துவத்தை உலகத்தில் உள்ள அனைத்து நாட்டினரும் சமயத்தவரும் பின்பற்றினாலே மனித இனம் செம்மை பெறும், உயர்வு பெறும். கெட்ட, கொடிய, வறுமை, தாழ்ந்த, பாவம், பொய், சூது, ஏமாற்று , கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பித்தலாட்டம், இலஞ்சம், ஊழல், தண்டனை போன்ற சொற்கள் உலகத்தில் கேட்க நினைப்பதற்குக் கூட இல்லாமல் காணாமல் போய்விடும்.

**நன்றியறிதல்**

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது**

என்ற குறளில் அழகாகச் சொல்லுகிறார். இதற்குமுன் எந்த ஒரு உதவியும் பெறாமல், தான் ஒருவருக்குச் செய்கின்ற உதவிக்கு விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் கொடுத்தாலும் ஈடாகாது.

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று**

ஒருவர் செய்த நன்மையை மறப்பது அறமன்று எனவும் அவர் செய்த தீமையை அன்றே மறப்பது அறமாகும் என்று மனிதனுக்கு சிறந்த பண்பைப் போதிக்கிறார்.

**நடுவு நிலைமை**
**தகுதி என ஒன்று நன்றே பகுதியால்**

**பால்பட்டு ஒழுகப் பெறின்**
விருப்பும் வெறுப்பும் இன்றி நடுநிலையுடன், நீதிநெறியுடன் செயல்பட்டால் அறம் தழைத்தோங்கும். இதை தனிமனிதன் அன்றி, நீதி மன்றங்களும் நாடுகளும் பின்பற்றினால் **மனிதகுலத்**துக்கு என்றும் அழிவில்லை .

**அடக்க வாழ்வு ஆக்கம் பெருக்கும்**
**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆர்இருள் உய்த்து விடும்**

அடக்கம் என்றும் நம்மை அழியாத அமரராக்கும், அடங்காமை நம்மை இருண்ட வாழ்க்கைக்குத் தள்ளிவிடும். எனவே அடக்கம் என்ற உயர்ந்த பண்பைப் பெற்று, நெறிதவறாத வாழ்வு வாழ வேண்டும் என்பது இதில் கூறப்பட்டுள்ள உயர்ந்த தத்துவம்.

**யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர்**
**சொல் இழுக்குப் பட்டு**

ஒருவர் எவற்றைக் காப்பாற்றாவிட்டாலும் தன் நாவையாவது அடக்கிக் காக்க வேண்டும், அப்படி இல்லாவிட்டால் இழுக்கான வார்த்தைகள் பேசித்துன்பத்தை மட்டுமே அடைவர் என்று நாவடக்கம் பற்றிக் கூறுவது உயர்ந்த தத்துவமாகும்.

**தீயினாற் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு**
என்ற குறளில், நாவு பயன்படுத்திய கடும் சொற்கள் என்றும் ஆறாத வடுவாய் சுடப்பட்டவரின் உள்ளத்தில் காயம்பட்டே இருக்கும் என்ற தத்துவம், உலகத்துக்கே பொதுநிலையாகும்

**ஈகை**

**அற்றார் அழிபசி தீர்த்தல், அஃது ஒருவன்**
**பெற்றான் பொருள் வைப்புழி**
இதில் உள்ள தத்துவம், மிகப்பொருள் சேர்த்து பெருஞ் **செல்வந்தனானவன், அப்பொருளைச் சேமிக்கும்** வழி ஏழைகளின் கொடிய பசியை நீக்குவதாகும்'.
இவ்வரிய தத்துவத்தை உலகத்தின் முதல் **கோடீஸ்வரர்**களான பில் கேட்ஸ் (கேட்ஸ் மெலிண்டா அறக்கட்டளை) வாரன் பஃபெட் (வாரன் பஃபெட் அறக்கட்டளை), இன் ஃபோசிஸ் நாராயண மூர்த்தி (இன்ஃபோசிஸ் அறக்கட்டளை) ஆகியோர் இன்று இந்திய, ஆப்பிரிக்க மற்றும் உலகில் உள்ள அத்தனை ஏழைகளின் பசி போக்க, கல்வி கொடுக்கத் தாங்கள் **சேர்த்த சொத்துகளில்** பாதியைக் கொடுக்க விழைந்துள்ளார்கள் என்றால் இக்குறள் காட்டும் தத்துவம்தான் காரணம்.

**கள்ளாமை**
**உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வோம் எனல்**

ஒரு அருமையான தத்துவம் இக்குறளில் அடங்கியுள்ளது. பிறன் பொருளை கவர்வோம் **என உள்ளத்தால் நினைத்தாலும் தீமை** என்று மனத் தூய்மைக்கும் இக்குறள் சான்றாக விளங்குகிறது.
**வாய்மை**
**வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாது ஒன்றும்**
**தீமை இலாத சொலல்**

இக்குறளில் தெளிவாய் விளங்கும் எளிய தத்துவம் "எந்தத் தீமையும் தராத சொல்லைச் சொல்ல, பேச வேண்டும் என்பதே.

**அற வாழ்வுக்கான தத்துவம்**

மனிதன் அறவழி நின்று, (நேர்மையாக, உண்மையாக, தர்ம மனசாட்சிப்படி, சத்தியத்தின் வழியாய்) வாழ்ந்து கிடைக்கின்ற உயரிய உணர்வே இன்பமாகும். இதைவிட்டு மற்ற வழியில் வருபவை புறம்பானவை என்ற அருமையான தத்துவத்தை,

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்**
**ஆகுல நீர பிற** என்ற குறள் வழங்குகிறது.

**முடிவுரை**

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

வாழ்க்கையும் அனுபவமும் ஒன்றையொன்று சார்ந்ததே. எல்லா அனுபவங்களையும் பெற்று, பகுத்து, வழி நின்று சான்றோர் ஆக வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்தாலும் முடியாத காரியம். **எனவே வள்ளுவர்தம் உலகப்பொதுமறை திருக்குறளைப்** படித்து அனைவரும் அதன் தத்துவங்களின் வழிநின்று வாழ்ந்தால் ஒவ்வொரு மனிதனும் இறைவனுக்கு நிகராவான்.

## 2. திருக்குறள் ஏன் உலகப் பொதுமறை என அழைக்கப்படுகிறது
## Why Thirukkural is called universal Veda.

உலகம் முழுமைக்கும் உரிய ஒப்புயர்வற்ற நூல் திருக்குறள் என்பதை அடையாளம் காட்டுவதற்காக, **வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து** வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று பாரதியார் திருவள்ளுவரைப் போற்றுகிறார். தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தரும் திருக்குறள் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற பொதுமைத் தன்மையை மையமாகக் கொண்டு யாக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட இனத்தார்க்கு மட்டும் கூறும் அறமாக இல்லாமல் உலகம் முழுமைக்கும் அந்நூல் அறங்கூறுகிறது. உலகில் தோன்றிய அனைத்து மனிதர்களுக்கும் "அறம்" பொதுவானது. சில கடமைகள் **பொதுவானவை என்ப**தை முப்பால் எடுத்து இயம்புகின்றது.

**மற்ற நூல்களில் இருந்து வேறுபாடு**

உலக மொழிகளில் தோன்றிய நூல்களான பகவத்கீதை, கௌடில்யம், பைபிள், குர் ஆன் ஆகியவை முறையே தத்துவ நூலாகவும், அரசியல் நூலாகவும், சட்ட நூலாகவும், மத நூலாகவும் இருக்கின்றன. ஆனால் குறள் நூலோ, அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கிய ஒன்றாகத்

திகழ்கிறது. அதனால் தான் திருக்குறள் இவ்வரிசை நூல்களில் இடம்பெறாது தனித்து இன்றளவும் நிலைத்து நிற்கிறது.

**சமயச்சார்பற்றது**

மேலும் குறள் நூலில் எந்தச் சமயக் கருத்தோ , சாதிக் குறிப்போ, குலத்தைப் பற்றிய அடையாளமோ அணுவளவும் இல்லை. தமிழன், இந்தியன் என்ற நிலைகட்கு அப்பால் மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தவே குறள் எழுதப்பட்டது. இவ்வுலகில் மனிதர்களை நல்வழிப்படுத்தும் ஒரு முழுமையான வாழ்வியல் நூலாகத் திருக்குறள் திகழ்கிறது. அதனால்தான், அவர் எங்கும், எவ்விடத்திலும் தமிழ் என்றோ , மொழி என்றோ பிரித்துப் பேசவில்லை. அவ்வாறு அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பாரே யானால், இந்நூல் ஒரு குறுகிய எல்லைக்குள்ளேயே அடைந்து கிடந்து இருக்கும். இஃது உலகம் முழுவதும் உள்ள மக்கள் போற்றும் நூலாக வெளியே தெரிந்திருக்காது.

**மன்னன் மக்கள், நாடு என எல்லாருக்கும் பொதுமை கருத்துக்கள்**

"வள்ளுவர் குறளில் சொல்லின் வன்மை பற்றிப் பேசுவார். ஆனால் எந்த மொழியின் பெயரையும், தம் தாய்மொழியான தமிழ் உட்படக் குறிப்பிடமாட்டார். நாடு பற்றிப் பேசுவார். ஆனால், எந்த நாட்டின் பெயரையும் குறிப்பிடமாட்டார். நீரைப் பற்றிப் பேசுவார். நதி வளத்தின் தேவை பற்றிப் பேசுவார். ஆனால் எந்த நதியின் பெயரையும் குறிப்பிடமாட்டார் : அரசு, அமைச்சு, ஆட்சி பற்றிப் பேசுவார். நாடு பற்றிய பெயரோ குறளில் இடம்பெறாது. பேசுவது அனைத்தும் பொதுவாகவே கூறப்படுகிறது"

பிறர்க்குத் தீமை செய்யாமல் இருப்பதே வாய்மை எனவும், பிறர் நாண நன்னயம் செய்துவிடல் உயரியது எனவும் கூறுவார். இது பாருலகம் முழுக்க மேற்கொள்ளப்பெற வேண்டியது. சூது, கள்ளுண்ணாமை, புலால் உண்ணாமை, பிறனில் விழையாமை, ஒழுக்கமுடைமை, புறங்கூறாமை, அழுக்காறாமை முதலிய கருத்துகளைக் கூறும் பகுதிகள் யாவும் எல்லா மனிதருக்கும் உரிய பொதுக் கருத்துகளாகும். சான்றுக்குச் சில :

**ஏதிலார் குற்றம் போல் தம்குற்றம் காண்கிற்பின்**
**தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.**
**அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்**
**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு**
**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்**

குளிர் நாடுகளில் வசிக்கும் மக்களுக்கு மதுவருந்துதல் தேவையான ஒன்றாகக் கருதப்படுகிறது. எனவே, அப்பகுதியில் வாழும் மக்களுக்குக் கள்ளுண்ணாமை, அதிகாரத்தில் வரும் கருத்துகள் ஏற்புடையதாக இருக்க வாய்ப்பில்லை என்பர். இதேபோன்று,தங்களுடைய வாழ்க்கைச் சூழலுக்கேற்பக் கருத்துகளை விட்டுவிட்டுத் தேவையான கருத்துகளை மட்டும் எடுத்துக் கொள்வது பொருந்தாது. உடலை,உள்ளத்தை, சுற்றுப்புறத்தைப் பாழ்செய்யும் எதுவும் தீமையானதுதான்.

**இனபேதம் பார்ப்பதில்லை**

பகவத்கீதை'யை அருளிச்செய்த கண்ணபிரான், அருச்சுனனைப் பார்த்து உபதேசம் செய்யும் போதும் அறங்கள் பேசப்படும். ஆனால், அங்கு வர்க்க பேதங்கள் உண்டு. வருணாச்சிரம தருமம் உண்டு. ஆனால், உலக மக்கள் யாவரும் சிறந்து விளங்க வேண்டும் என்ற உயரிய நோ**க்கினால், மனிதகுலம்** அனைத்திற்கும், உரிய பொதுவான அறங்களை விளக்கிச் செல்கிறார் வள்ளுவர். தமக்குப் பின்பற்றுவதற்கு எளியதாக இல்லை என்ற காரணத்தினால் இதனைப் புறக்கணிக்க முயற்சி செய்வது ஏற்புடையதாகாது. வள்ளுவருக்குப் பின் 2000 ஆண்டுகள் கழித்துச் சமுதாயநிலை எவ்வளவோ மாறியும்,வளர்ந்தும் காணப்படுகிறது. காலத் தேவைக்கேற்ப நாமும் மாற வேண்டியது தேவைதான். ஆனால், எக்காலத்திற்கும் ஏற்ற கருத்துகள் எவ்வளவோ திருக்குறளில் பொதிந்து கிடக்கின்றன. இங்கு ஓர் அறிஞரின் கருத்து இச்சிந்தனைக்கு அரண்சேர்ப்பதாக உள்ளது.

**எந்தக் காலகட்டத்திற்கும் பொருந்தக் கூடியது**

" ஒரு குறிப்பிட்ட பகுதியினரால் பின்பற்றுவதற்கு எளிமையாக இல்லை என்பதால், குறள் கருத்துகளைப் புறக்கணிக்கச் சிலர் முற்படலாம். கால மாறுபாடு, சமுதாய மாறுபாடு, விஞ்ஞான வளர்ச்சி, அரசியல் மாற்றங்கள், பல்வேறு புரட்சிகளின் விளைவாகத் திருக்குறளில் சிலபல கருத்துக்கள் சிலருக்குப் பொருந்தாமல் தோன்றலாம். ஆனால், கடையில் வாங்கும் மருந்திற்குத்தான் காலாவதி உண்டே தவிர, திருக்குறள் சிந்தனைகளுக்குக் காலப் புறக்கணிப்போ , மதிப்புக் குறைபாடோ ஒரு நாளும் வருவதில்லை. இவருடைய உலகம் தழுவிய பொதுமைக்கு மேலும் சில சான்றுகள்.

**இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்**
**ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு**
**இரவின் இளிவந்த தில்**
**ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை**

என்ற குறள்களின் மூலம் இரந்து உயிர்வாழ்பவர்களை வெறுக்கிறார் வள்ளுவர். இந்த இரப்பவர் என்பவர்கள் அன்றும் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். உலகம் முழுவதும் பரந்து

காணப்படுகின்றனர். ஒரு சமூகத்தில் இந்நிலை மாறவேண்டும். இந்நிலை மாறினால் தான் வள்ளுவர் காண

**நினைத்த உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்**
**சேராது இயல்வது நாடு**

என்ற குறளில் சுட்டப்படுகின்ற நாட்டின் வளத்தைக் காண இயலும்.

**தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதில்லார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று**

எனும் குறளில் ஒரு தனி மனிதனின் கடமையை வலியுறுத்துகிறார். இது உலகம் முழுமையிலும் உள்ள மனித சமூகத்துக்கும் பொருந்தும். இதுபோலத் தனி மனிதக் கடமைகள், குடும்பக் கடமைகள், சமூகக் கடமைகள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் எவையெவை எனத் தனித்தனியாகப் பட்டியலிடுகிறார்.

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல்**

எல்லாவற்றிற்கும் மேலாக ஒழுக்கம் ஒருவனுக்கு இன்றியமையாத ஒன்றாகிறது. அதனால் வள்ளுவர் ஒழுக்கத்தை உயிரை விட மேன்மையாகக் கருத வேண்டும் என்கிறார் (குறள் 131). இங்கு ஒழுக்கம்' என்று பொதுப்படையாகத் தானே சொல்லுகிறாரே தவிர, ஒழுக்கம் இவை இவை எனப் பட்டியலிடவில்லை . காரணம், ஒழுக்கமானது இனத்துக்கு இனம், சமூகத்திற்குச் சமூகம், நாட்டிற்கு நாடு மாறுபடும் தன்மையுடையது. அதனால்தான் வள்ளுவர், உலகப் பொதுமையைக் கருதி ஒழுக்கம் என்பதனை "உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" (குறள் 140) என்று வரையறை செய்கிறார். மேலும் பிறனில் விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை போன்ற ஒழுக்கங்களும் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிமுறைகள் ஆகும்.

திருக்குறளில் உலகப் பொதுமைக் கூறுகள் மிஞ்சி இருக்கின்றன. அதனால் தான் எந்நாட்டு, எம்மொழி பேசும் எவ்வின மக்களும் விரும்பிப் படிக்கும் நூலாகத் திகழ்கிறது. இவ்வாறு திருக்குறளில் உலகம் முழுமையும் உள்ள மனிதர்களால் போற்றிப் பாராட்டக்கூடிய ஒப்புயர்வற்ற கருத்துக்கள் பல உள்ளன. தனி மனிதனுடைய ஒழுக்கத்தையும் அவன் சார்ந்து வாழும் சமூகம், நாடு, அரசு, அமைச்சு அனைத்தும் எவ்வாறு திகழ வேண்டும் என்பதையும் அழகாக எடுத்துக் காட்டுகிறது. காதல் வாழ்வையும், இல்லறத்தின் மேம்பாட்டையும் விளக்கி மனிதனே நீ மனிதனாக வாழ் என்று அறிவுறுத்தி வையத்துள் அவன் வாழ்வாங்கு வாழ வழி காட்டுகிறது. சமயத்தைக் கடந்து உலக சமுதாயம் அனைத்தும் ஒற்றுமையுடன் திகழ வழிகாட்டும் திருக்குறள் உலகப் பொதுமைக் கூறுகள் சின்னமாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

### 3. திருவள்ளுவரின் கடவுள் கொள்கயை விளக்கு
### Explain Thiruvalluvar's God principle

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'யாதும் ஊரே யாவரும்கேளிர்' என்பன போன்ற உயர்ந்த சிந்தனைகள் யாரிடமிருந்து வெளிப்படும்? எந்த ஒரு வேறுபாடும் இல்லாமல், மனித நேயத்துடன்

சிந்திக்கும் உயர்ந்த நோக்கம் கொண்ட, சிறந்த பண்பும்,பரந்த,மனப்பான்மையும் கொண்டவர்களிடமிருந்தே வெளிப்படும்.இத்தகைய சிறந்த சிந்தனையாளர்களின் பாரம்பரியத்தைச் சார்ந்தவர் திருவள்ளுவர்.

வள்ளுவர் கடவுளுக்கோ சமயத்திற்கோ தம் நூலில் பெயர் கொடுத்தார் அல்லர். அப்படிப் பெயர் கொடுத்திருந்தால் சிலர் ஏற்றிருப்பர் பலர் ஏற்றிருக்க மாட்டார். ஏற்றிருந்தாலும் அப்பெயர் சில காலமோ கூடுதலான காலமோ வாழ்வு பெற்றிருக்கும். ஆனால் நெடுங்காலம் நிலைத்திருக்க வாய்ப்பில்லை. கடவுளின் பெருமையோ சிறப்போ பெயரில் இல்லை; பெயர் நாளடைவில் மாறும் திரியும். அதில் பயனில்லை. ஆனால் கடவுளைப் பண்பின் வடிவமாக வலியுறுத்துவது அறிவுச் சார்ந்த முடிநிலையாகும். கடவுளைப் பண்பின் வடிவமாகக் காண்பது அனைவர்க்கும் ஏற்கத்தக்கதாகும்; அதில் சிக்கலோ நெருடலோ ஏற்பட வாய்ப்பில்லை; வேற்றுமையோ மாறுபாடோ தோன்றவும் இடவில்லை. அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட அது துணைநிற்கும். இந்த வாய்ப்பு ஏற்படும் போது சமுதாயத்தில் வேற்றுமை ஏற்பட வாய்ப்பில்லை; ஆனால் ஒற்றுமை பெருகப்பெரும் வாய்ப்புண்டு.

**கடவுள் தொடர்பான வள்ளுவரின் கருத்து**

வள்ளுவர் காலத்தில், இந்தியாவின் பல பகுதிகளில் சமயங்கள் நிறுவனர்களின் பெயர்களிலோ தத்துவங்களின் பெயர்களிலோ இருந்தன. ஆனால் வள்ளுவரோ கடவுளுக்குப் பெயரைக் குறிப்பிடாததைப் போன்றே தம் சிந்தனைகளைப் பெயர் சூட்டிய சமயமாக அவர் குறிப்பிடவில்லை, இதுவொரு உயர்ந்த கொள்கை, உன்னதமான கொள்கை; வள்ளுவர் இவ்வாறு தம் கொள்கைகளை வகுத்திருப்பது அசாதாரணமானது. இவ்வாறு அவர் குறிப்பிட்டிருப்பதால், வள்ளுவர் கூறும் கடவுள் கொள்கையைத் தமிழகத்தில் உள்ளவர்களும் பின்பற்றலாம்; ஏன்? உலக மாந்தர் அனைவரும் பின்பற்றலாம்; குறிப்பாக அவர் கொள்கையில் ஓர் உலகப் பண்பு (Universalism) புலப்படுகிறது. இப்பண்பு, சமய நம்பிக்கையில் எந்தப் பகுதி மனிதனையும் பிரிக்காது. வேற்றுமை படுத்தாது; சமயப் பூசலை உருவாக்காது. மாறாக அனைவரையும் ஒற்றுமை படுத்தும், வேண்டாத சமயக் காழ்ப்பையும், வீணான மோதலையும் உருவாக்காமல் தடுக்கும். குறிப்பாகப் பரந்த மனப்பான்மையையும், நல்லிணக்கத்தையும் உயர் குறிக்கோளையும் அது உருவாக்கத்துணைபுரியும்.

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.**

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது**

**அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது**

இக்குறட்பாக்களிலும், ஏனைய குறட்பாக்களிலும் கடவுளின் பண்பைத் தான் அவர் குறிப்பிடுகிறார். மலர் மிசை ஏகினான் என்றும், தனக்குவமை இல்லாதான் என்றும், அறவாழி அந்தணன் என்றும் குறிப்பிட்டுள்ளாரேயன்றி, இறைவனுக்கு எந்தப் பெயரையும், உருவத்தையோ, பெரும் மகத்துவத்தையோ அவர் குறித்தார் அல்லர். இஃது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. இறைவனுக்குப் பெயரையோ உருவத்தையோ அவர் குறிப்பிட்டிருந்தால், வேறு சமய அசிரியர்கள் தாங்கள் விரும்பும் இறைவற்கு, வேறொரு பெயரையோ உருவத்தையோ குறிப்பிட வாய்ப்புண்டு; அவ்வாறு குறிப்பிட்டால் வேறு வேறு சமயம் பிறக்கும்; வேறுவேறு சமயப் பிறப்பால் வேற்றுமை பெருகும், வள்ளுவர் இதற்கு இடமளித்தார் அல்லர்.

கடவுள் வாழ்த்தில் இறைவனின் பண்பைப் பலவாறு சிறப்பித்துப் பேசும் அவர், ஏனைய அதிகாரங்களில் சில இடங்களில் மட்டுமே இறைவனைக் குறிப்பிடுகிறார். அவற்றில், மனிதனுக்காக இறைவனைக் கடிந்து பேசும் நிலையும் (குறள் - 1062) உண்டு;

**இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்**

இன்னும் கூற வேண்டுமானால், அவர் இறைவனைக் காட்டிலும், மன்னனைத்தான் (அரசு பற்பல இடங்களில் பேசுகிறார். இதனைப் போன்றே, சமயத்தைக் காட்டிலும், சமுதாயத்தைத்தான் அவர் பெரிதும் பேசுகிறார். இவை அவரது முற்போக்குச் சிந்தனையை, தொலைநோக்குப் பார்வையை நன்கு புலப்படுத்துவதாகும்

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்.**

**கடவுளின் பண்புகளைத் தான் குறிப்பிடுகிறார்.**

முழுமுதற் பொருளானவன் கடவுள் (இறைவன்) என்றும் அவனுடைய தன்மைகள் இவையென்றும் கூறுவது. இந்த உலகம் ஆதி பகவனை முதலாக உடையது. அவன் வாலறிவன். அவள் தாள் வணங்குதல் வேண்டும். உள்ளத்தில் இருப்பவன்; அவா அற்றவன்; இறைவன், மெய்யான ஒழுக்க நெறியாளன், உவமை இல்லாதவன், அறமே கடலாகிய அந்தணன், அறிதற்கு எளிய குணாளன்.
ஆக அத்தகையனை உள்ளத்தில் எண்ணி வழிபடுவதே வழிபாடாகும். எழுத்து, கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலிய சொற்கள் இவ்வதிகாரத்தில் சிறப்பு வாய்ந்தனவாகும். அதுவே போன்று அறம், அந்தணன், மனம் முதலியனவுமாகும். மனக்கவலை மாற்றும் நெறி உணர்த்தப்பட்டது.
அற ஆழி, பெருங்கடல் என்பவை கூறப்படுகின்றன. ஆசையற்ற தன்மையும் ஒழுக்க நெறியுமே இறைவனுக்கு முழுத்தன்மையாகக் கூறப்பட்டன வென்று சுருங்கக் கூறலாம்,

ஒழுக்கமுடைமை, நீத்தார் பெருமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் முதலிய அதிகாரங்கள் ஒப்பிடுதற்குரியன. முதலிரண்டு குறட்பாக்களும் வாலறிவனை வணங்குவதே கற்றலின் பயன் என்று கூறுகின்றன. மூன்று முதல் ஆறு வரையுள்ள பாக்கள், இறைவனை நினைத்தலும், வாழ்த்தலும், அவன் நெறி நிற்றலும் செய்வார், பேரின்பம் பெறுவர் என்பதைக் கூறுகின்றன.

ஏழு, எட்டு, ஒன்பது ஆகிய பாக்கள் இறைவனை நினைத்தலும், வாழ்த்தலும், வணங்கலும் செய்யாதிருத்தலால் வரும் குற்றத்தினைக் கூறுகின்றன. பத்தாம் பாடல் இறைவனை நினைப்பவர் பிறவியை அறுப்பர் என்றும், நினையாதார் பிறவி அறாமல் ஆவர் என்றும் கூறுகின்றது.

திருக்குறளில் அதிகாரத் தலைப்புகளில் காணப்படும் சொற்கள் அந்தந்த அதிகாரத்திலுள்ள குறட் பாக்களில் காணப்படுகின்றன, ஆனால், இந்த அதிகாரத்தில் காணப் படும் 'கடவுள் வாழ்த்து' என்ற சொற்கள் குறட்பாக்களில் காணப்படவில்லை.

அறிவு பெருகப் பெருக அறியாமையும் நிழல்போல் தொடருகிறது. அறிவுப் பெருகப் பெருக ஐயமும் விடாமல் தொடருகிறது. அறிவு பெருகப் பெருக ஒன்றை வேறொன்றாகக்கொள்ளும் மருட்சி தோன்றுகிறது. இவற்றைக் குறள், இருள், ஐயம், மருள், என்று குறிப்பிடுகிறது. எனவே, இருள், ஐயம், மருள் ஆகிய மூன்றும் நீங்கிய ஒருவன் இறைவன். அவன் 'வாலறிவன்' என்று சுட்டப்படுகிறது. இவ்வாறு எந்த ஒரு சார்பும் இல்லாமல், கடவுளைப் பற்றிய விளக்கம் குறளில் பல இடங்களில் இடம் பெற்றுள்ளன.

For Demo class whatSapp to 9952521550

**TEST SCHEDULE | தேர்வு அட்டவனை**

| PORTION |
| --- |
| EXPECTED PATTERN WITH LIVE DISCUSSION |
| • திருக்குறள்<br>• மதச் சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம்.<br>• அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை<br>• மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்<br>• Thirukkural<br>• Significance as a Secular literature<br>• Relevance to Everyday Life<br>• Impact of Thirukkural on Humanity |
| திருக்குறள்<br>✓ திருக்குறளும் மாறாத விழுமியங்களும் - சமத்துவம், மனிதநேயம் முதலானவை<br>✓ சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு<br>✓ திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள் |

**Thirukkural**

- ✓ Thirukkural and Universal Values - Equality, Humanism, etc
- ✓ Relevance to Socio - Politico - Economic affairs
- ✓ Philosophical content in Thirukkural

- தமிழர் நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - செவ்வியல் காலம் முதல் இக்காலம் வரை. Class -1
- Origin and Development of Tamil Civilization - From classical antiquity to modernity.
- Geographical feature of Tamilnadu
- தமிழகத்தின் புவியியல் அமைப்புகள்
- Archaeological sources / excavations
- தொல்லியல் ஆதாரங்கள் / கண்டுபிடிப்புகள்
- Pre history
- வரலாற்றுக்கு முந்தைய காலம்
- Race, language , Script
- இனம், மொழி, எழுத்து
- Sangam Age
- தமிழர் நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - செவ்வியல் காலம் முதல் இக்காலம் வரை. Class -2
- சங்க காலம்
- Political history of sangam age
- சங்க கால அரசியல் வரலாறு
- Political condition of the sangam age
- சங்க கால அரசியல் நிலைமை
- Economy of the sangam age
- சங்க கால பொருளாதாரம்
- Social condition of sangam age
- சங்க கால சமூக நிலைமை
- Religion in the sangam age
- சங்க கால மதம்
- Education in the sangam age
- சங்க கால கல்வி
- Sangam literature
- சங்க இலக்கியம்
- Fine arts during sangam period
- சங்க கால நுண்கலைகள்

- தமிழர் நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - செவ்வியல் காலம் முதல் இக்காலம் வரை. Class -3
- Origin and Development of Tamil Civilization - From classical antiquity to modernity.
- Age of Kalabhras
- களப்பிரர் காலம்
- Contribution of Jainism to Tamil Culture
- தமிழ் கலாச்சரத்துக்கு சமணத்தின் பங்களிப்பு
- Contribution of Buddhism to Tamil Culture
- தமிழ் கலாச்சாரத்துக்கு பௌத்தத்தின் பங்களிப்பு
- History of First pandyan empire
- முதலாம் பாண்டியப்பேரரசு வரலாறு
- Pandyan Architecture
- பாண்டிய் கலைத்திறன்

- Orgin of Pallavas
- பல்லவர்களின் தோற்றம்
- Great pallavas
- பெரும் பல்லவர்களின்
- Administration of Pallavas
- பல்லவர்களின் நிர்வாகம்
- Social Condition of Tamilnadu from 6th Century to 9th Century
- தமிழ் நாட்டின் சமூக நிலைமை 6 ஆம் நூற்றாண்டிலிருந்து 9ம் நூற்றாண்டு
- Economic condition under the pallavas
- பல்லவர்களின் கீழ் பொருளாதார நிலைமை
- Religion in the age of the pallavas
- பல்லவர் கால சமுதாயம்
- Bakthi movement
- பக்தி இயக்கம்
- Educational institutions under the pallavas
- பல்லவர்களின் கீழ் கல்வி நிறுவனங்கள்
- Pallava architecture
- பல்லவர்களின் கட்டிடக் கலை
- Pallavas contribution to fine arts
- நுண் கலைகளுக்கு பல்லவர்களின் பங்களிப்பு
- தமிழர் நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - செவ்வியல் காலம் முதல் இக்காலம் வரை. Class -4
- Origin and Development of Tamil Civilization - From classical antiquity to modernity
- Imperial Cholas
- பிற்கால சோழர்கள்
- Political condition under cholas
- சோழர் கால அரசியல் நிலைமை
- Social condition under cholas
- சோழர் கால சமூக நிலைமை
- Economic condition under cholas
- சோழர் கால பொருளாதார நிலைமை
- Religion under the cholas
- சோழர் கால சமயம்
- Chola architecture
- சோழர்களின் கட்டிடக்கலை
- Education under cholas
- சோழர்கள் ஆட்சியின் கீழ் கல்வி
- Cholas literature
- சோழர்கால இலக்கியம்
- Fine arts under the cholas
- சோழர்கால நுண்கலைகள்
- தமிழர் நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - செவ்வியல் காலம் முதல் இக்காலம் வரை. Class -5
- History of second pandyan empire
- இரண்டாம் பாண்டியப் பேரரசின் வரலாறு
- Social condition under pandyas
- பாண்டியர்களின் கீழ் சமூக நிலைமை
- Economic condition under pandyan
- பாண்டியர்களின் கீழ் பொருளாதார நிலைமை
- Religion under the pandyan
- பாண்டியர்களின் கீழ் சமயம்

- pandyan architecture
- பாண்டியர்களின் கட்டிடக்கலை
- fine arts under the pandyas
- பாண்டியர்கால நுண்கலைகள்
- தமிழர் நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - செவ்வியல் காலம் முதல் இக்காலம் வரை. Class -6
- Muslim invasion on Tamil Country
- தமிழ்நாட்டின் மீது முஸ்லீம் படையெடுப்பு
- The Madurai Sultante
- மதுரை சுல்தான்
- The last pandyas
- கடைசிப் பாண்டியர்கள்
- Vijayanagar rule in Tamil Country
- தமிழ்நாட்டில் விஜய நகர ஆட்சி
- Establishment of Nayakdoms
- நாயக்கர்கள் ஏற்பாடு
- Administration under Vijayanagaram empire
- விஜய நகர ஆட்சியின் கீழ் நிர்வாகம்
- Social condition in the tamil country under vijayanagar rule
- விஜய நகர ஆட்சியின் கீழ் சமூக நிலைமை
- Religios Condition under the vijayanagar rule
- விஜய நகர ஆட்சியின் கீழ் சமயம்
- Economic condition under the vijayanagar rule
- விஜய நகர ஆட்சியின் கீழ் பொருளாதார நிலைமை
- Vijayanagar Architecture
- விஜய நகர கட்டிடக் கலை
- Role of Temples in Mediveial Tamilaham
- இடைக்கால தமிழகத்தி கோவில்களின் பங்களிப்பு
- Senchi nayaks and and Tanjore nayaks
- செஞ்சி நாயக்கர்கள் மற்றும் தஞ்சாவூர் நாயக்கர்கள்
- தமிழர் நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - செவ்வியல் காலம் முதல் இக்காலம் வரை. Class -7
- Martha rule in Tamilnadu
- தமிழகத்தில் மராத்தியர்கள் ஆட்சி
- Palaiyakkarar system & revolt
- பாளையக்காரர் முறை மற்றும் புரட்சி
- Maravars Rule in Tamilnadu
- தமிழகத்தில் மறவர்களின் ஆட்சி
- Advents of European in Tamilnadu
- தமிழ்நாட்டிற்கு ஐரோப்பியர் வருகை
- Karnatka & Mysore Wars
- கர்னாடக மற்றும் மைசூர் போர்
- Karnatka nawbs
- கர்னாடக நவாப்கள்
- South Indian revolt
- தென்னிந்தியப் புரட்சி
- Vellore revolt
- வேலூர் புரட்சி
- தமிழர் நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - செவ்வியல் காலம் முதல் இக்காலம் வரை. Class-8
- British Rule in Tamilnadu
- ப்ரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் தமிழகம்

- Growth of legislature
- சட்டமன்றத்தின் வளர்ச்சி
- Development of Justice police
- நீதித்துறையும் காவல்துறையும்
- Economic condition under British rule
- ப்ரிட்டிஷ் ஆட்சியில் பொருளாதார நிலைமை
- Development of education under British rule
- ப்ரிட்டிஷ் ஆட்சியில் கல்வி மேம்பாடு
- Role of Chrisrian Missionary
- கிறிஸ்துவ மிஷனரிகளின் பங்களிப்பு

- தமிழர் நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - செவ்வியல் காலம் முதல் இக்காலம் வரை. Class 9
- Role of Freedom Struggle in Tamilnadu
- விடுதலைப் போராட்டத்தில் தமிழகம்
- Various freedom fighters
- பல்வேறு விடுதலைப் போராட்ட வீரர்கள்

- Rationalist Movement
- பகுத்தறிவு இயக்கம்
- Ayothe Dasa pandithar
- அயோத்தி தாசப் பண்டிதர்
- Self Respect movement
- சுய மரியாதை இயக்கம்
- Temple entry Movement
- ஆலைய நுழைவு இயக்கங்கள்
- Justice party rule and Achievement
- நீதிக்கட்சியின் ஆட்சி மற்றும் சாதனைகள்

- தமிழ்நாட்டின் இசை மரபு - நாட்டுப்புற இசை, நாட்டுப்புற நடனம், நாட்டுப்புற இசைக் கருவிகள் மற்றும் நாட்டுப்புற நாடகங்கள் - செவ்வியல் காலம் தொடங்கி பின் நவீனகாலம் வரை அதன் மாறுபாடுகள்.

- Musical Tradition of Tamil Nadu - Folklore - music, dance, Musical instruments and folk drama - From classical age to post-modern age with its modifications.

நாடகக்கலை - வீதி நாடகம் - நாட்டார் அரங்கம் - மரபு வழியிலான நாடக உத்திகள்.

Dramatic Art Form - Street Theatre - Folk Theatre - Conventional Theatrical techniques.

சமூகப் பொருளாதார வரலாறு - கடல் கடந்த வணிகம் - சங்க இலக்கியச் சான்றுகள் (பட்டினப்பாலை முதலியன)

Socio-Economic History - Overseas trade - evidence from classical literature like "Pattinapalai".

பகுத்தறிவு இயக்கங்கள் - திராவிட இயக்கம், சுயமரியாதை இயக்கம். தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதலில் சமூக சீர்திருத்த இயக்கங்களின் பங்கு - இட ஒதுக்கீடும் அதன் பயன்களும் - தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் சமூக நீதி மற்றும் சமூக ஒற்றுமையின் பங்கு.

| |
|---|
| **Contribution of Social Reform Movements in the implementation of Social Welfare Measures and Socio-Economic Development of Tamil Nadu - Reservation Policy and its Benefits - Contribution of Social Justice and Social Harmony in the Socio Economic Development of Tamil Nadu - 1** |
| **பகுத்தறிவு இயக்கங்கள் - திராவிட இயக்கம், சுயமரியாதை இயக்கம். தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதலில் சமூக சீர்திருத்த இயக்கங்களின் பங்கு - இட ஒதுக்கீடும் அதன் பயன்களும் - தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் சமூக நீதி மற்றும் சமூக ஒற்றுமையின் பங்கு.** <br><br> **Contribution of Social Reform Movements in the implementation of Social Welfare Measures and Socio-Economic Development of Tamil Nadu - Reservation Policy and its Benefits - Contribution of Social Justice and Social Harmony in the Socio Economic Development of Tamil Nadu -2** |
| **பெண்ணியம் - சமுதாயத்தில் பெண்ணியம், இலக்கியத்தில் பெண்ணியம் - பல்வேறு கருத்துகளும் பார்வைகளும்.** <br><br> **Feminism - Socio - feminism, Literary feminism - Different Concepts and Perceptions.** |
| **Full portion** |

(From test 4 there will be Translation part and Letter Writing, Thirukural essay, Comprehension, précis Writing, Hints Development in every test)

Full Pattern Test will be continued after Preliminary Exam